Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ் ®
Madurai Mani Tamil Evening Daily
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்




மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 76 | உள்ளூர் - 17.03.2026 | செவ்வாய் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 76 | வெளியூர் - 18.03.2026 | புதன் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

முன்னாள் ராணுவத்தினர் மருத்துவமனையில் காலியிடங்கள்!

சனி பலவீனமாக இருப்பதை குறிக்கும் அறிகுறிகள்/ பரிகாரங்கள்!

தமிழகத்தின் அடுத்த டி.ஜி.பி. யார்?

அரசு ஊழியர்களே கவனிங்க! ஏப்.1 முதல் முக்கிய மாற்றம்?

## Strait of Hormuz விவகாரத்தில் எந்த நாட்டின் உதவியும் அமெரிக்காவுக்கு தேவையில்லை - டிரம்ப் விரக்தி!



புதுடெல்லி, மார்ச். 17–

மத்திய கிழக்கில் ஏற்பட்டு உள்ள போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கி உள்ளது. இதனால் வணிக கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகள் தங்களது போர்க்கப்பல்களை ஹார்முஸ் ஜலசந்திக்கு அனுப்ப வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்தார். ஆனால் அவரது கோரிக்கையை எந்த நட்பு நாடும் ஏற்கவில்லை. இதனால் டிரம்ப் அதிருப்தி அடைந்து உள்ளார்.

இந்த நிலையில் ஹார்முஸ் ஜலசந்தி விவகாரத்தில் எந்த நாட்டின் உதவியும் அமெரிக்காவுக்கு தேவையில்லை என்று டிரம்ப் தெரிவித்து உள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:–

ஹார்முஸ் ஜலசந்தி பாதுகாப்பு விவகாரத்தில் எங்களுக்கு உதவ யாரும் தேவையில்லை. நாங்கள் உலகின் வலிமையான தேசம். உலகில் உள்ள நாடுகளிலேயே மிகவும் வலிமையான ராணுவத்தை நாங்கள் கொண்டுள்ளோம்.

கூட்டுப் பாதுகாப்பு என்ற கருத்து இருந்தபோதிலும் நேட்டோ அமைப்பின் உறுப்பினர்கள் உதவவில்லை. நான் அவர்களிடம் உதவிக்காக மிகவும் வற்புறுத்திப் பேசுவதில்லை. ஏனெனில் எனது மனநிலை இதுதான். நமக்கு யாருடைய உதவியும் தேவையில்லை. ஹார்முஸ் ஜலசந்தி வழியாக நடைபெறும் கப்பல் போக்குவரத்தின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் உதவுவதற்கு உலக நாடுகள் போதிய ஆர்வம் காட்ட வில்லை.

வளைகுடா நாடுகள் மீது ஈரான் நடத்திய தாக்குதல்களால் நான் திடுக்கிட்டு போனேன். இதை யாரும் எதிர்பார்க்கவில்லை. நாங்கள் மிகவும் அதிர்ச்சியடைந்துவிட்டோம்.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள மற்ற நாடுகளை தாக்கும் நடவடிக்கையில் ஈரான் ஈடுபட்டிருக்கக் கூடாது. ஈரானுக்கு எதிராக இஸ்ரேல் ஒருபோதும் அணு ஆயுதத்தைப் பயன்படுத்தாது. ஈரான் மீதான போர் விரைவில் முடிவுக்கு வரும். ஆனால் இந்த வாரத்திற்குள் போர் முடிய வாய்ப்பில்லை.

ஈரானின் பல்வேறு பகுதிகளில் 7000–க்கும் மேற்பட்ட இலக்குகள் தாக்கப்பட்டன. ஈரான் ராணுவம் முற்றிலும் அழிக்கப்பட்டுள்ளது. ஈரானின் பாலிஸ்டிக் ஏவுகணை ஏவுதல்களில் 90 சதவீதத்தையும், டிரோன் தாக்குதல்களில் 95 சதவீதத்தை நாங்கள் குறைத்து உள்ளோம். ஈரானின் வான் வழித் தடுப்பு சாதனங்கள் முற்றிலுமாக சிதைக்கப்பட்டு விட்டன.

இவ்வாறு டிரம்ப் கூறினார்.

## இந்தியாவிற்கு எதிராக போர் தொடுக்க திட்டம்:

# டெல்லியில் 7 வெளிநாட்டினர் கைது!

## என்.ஐ.ஏ. அதிரடி!!



புதுடெல்லி, மார்ச். 17–

இந்தியாவிற்கு எதிராக பயங்கரவாத நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிட்டதாக கூறி தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ) 6 உக்ரைன் நாட்டவர்கள் மற்றும் ஒரு அமெரிக்கர் உட்பட 7 வெளிநாட்டினரைக் கைது செய்துள்ளது. கடந்த வாரம் பல என்.ஐ.ஏ குழுக்களால் ஒருங்கிணைந்து நடத்தப்பட்ட சோதனையின் கீழ் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பான முதல் தகவல் அறிக்கை வெள்ளிக்கிழமை மாலை பதிவு செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்தவர் கொல்கத்தா விமானத்தில் குடிவரவுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டார். மேலும் உள்ள 6 உக்ரைன் நாட்டவர்களில் 3 பேர் லக்னோவிலும் 3 பேர் டெல்லி விமான நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் முறையான விசாக்களுடன் இந்தியா வந்திருந்தாலும், கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான அனுமதியின்றி மிசோரம் மாநிலத்திற்கு சென்றதாக தகவல் வெளியாகியுள்ளது. அதுமட்டுமல்லாமல், அவர்கள் இந்தியாவிற்கு எதிராக செயல்படும் குழுக்களை சந்தித்து ஐரோப்பாவிலிருந்து பல ட்ரோன்களை வழங்கியதாகவும் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் டெல்லிக்கு கொண்டுவரப்பட்டு நீதிபதி முன்பு ஆஜர்ப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை 3 நாட்கள் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. தொடர்ந்து திங்கள் கிழமை அவர்களின் காவல் மேலும் 11 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டு மார்ச் 27 வரை சிறையில் அடைக்க உத்தரவிடப்பட்டது.

என்.ஐ.ஏ அமைப்பின் கூற்றுப்படி, குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஐரோப்பாவிலிருந்து மியான்மருக்கு அதிக அளவிலான ட்ரோன்களை சட்டவிரோதமாக இறக்குமதி செய்து, அங்குள்ள இனவாத ஆயுதக் குழுக்களுக்கு வழங்கியுள்ளனர். இந்த ஆயுதக் குழுக்கள், தடை செய்யப்பட்ட சில இந்திய கிளர்ச்சிக் குழுக்களுக்கு ஆயுதங்கள் மற்றும் பிற பயங்கரவாத உபகரணங்களை வழங்கியும், அவர்களுக்குப் பயிற்சி அளித்தும் ஆதரிப்பதாகக் கூறப்படுகிறது.

## கரூர் கூட்ட நெரிசல் விவகாரம்: டெல்லியில் சிபிஐ விசாரணைக்கு ஆஜரானார் செந்தில் பாலாஜி!



டெல்லி, மார்ச். 17–

கடந்த 2025ம் செப்டம்பர் 27ஆம் தேதி கரூர் வேலுச்சாமிபுரத்தில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழக பரப்புரை கூட்டத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் தொடர்பான வழக்கை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில், தற்போது சிபிஐ விசாரித்து வருகிறது, \டெல்லியில் சிபிஐ விசாரணைக்கு ஆஜரானார் திமுகவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி நேரில் ஆஜரானார். முன்னதாக நேற்று( 16.03.2026) நள்ளிரவு சென்னையில் இருந்து விமானத்தில் டெல்லி சென்றவர், அங்கு ( 17.03.2026) காலை 11 மணி அளவில் சிபிஐ அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜரானார்.

முன்னதாக, இந்த விவகாரத்தில், தனக்கு எதன் அடிப்படையில் தனக்கு சம்மன் அனுப்பப்பட்டிருக்கிறது என கேள்வி எழுப்பிய நிலையில், இன்று விசாரணைக்கு ஆஜரானார்.

## ஆப்கன் மருத்துவமனை மீது பாகிஸ்தான் தாக்குதல்: 400 பேர் பலி; 250 பேர் காயம்!



காபூல், மார்ச். 17–

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள மருத்துவமனை மீது பாகிஸ்தான் நடத்திய வான்வழி தாக்குதலில் ஏறத்தாழ 400 பேர் உயிரிழந்ததாக தலிபான் அரசு தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதலில் சுமார் 250 பேர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதல் திங்கட்கிழமை (மார்ச் 16) இரவு நடந்ததாக ஆப்கன் அரசின் துணை செய்தித் தொடர்பாளர் ஹம்துல்லா ஃபித்ரத் தெரிவித்துள்ளார். தொடர்ந்து தீயை அணைக்கும் பணியிலும், உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்கும் பணியிலும் பல்வேறு குழுக்கள் ஈடுபட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## விமானப் பயணிகள் கவனத்திற்கு... சென்னை ஏர்போர்ட்டில் 40 நாட்களுக்கு போக்குவரத்து மாற்றம்!




சென்னை, மார்ச். 17–

சென்னை சர்வதேச விமான நிலையத்தில் நடைபெற்று வரும் புதிய முனையப் பணிகள் மற்றும் விரிவாக்கப் பணிகள் காரணமாக, இன்று ( 16.03. 2026)முதல் அடுத்த 40 நாட்களுக்கு வாகனப் போக்குவரத்தில் அதிரடி மாற்றம் செய்யப்படுவதாக விமான நிலைய நிர்வாகம் அறிவித்துள்ளது.

டோல்கேட் மூடல்: டெர்மினல் 4 அருகே அமைந்துள்ள டோல்கேட் (Toll–gate) முழுமையாக மூடப்பட உள்ளது. தாம்பரம் திசையில் இருந்து விமான நிலையத்திற்கு வரும் வாகனங்கள், சர்வீஸ் சாலையைப் பயன்படுத்தி டெர்மினல் 2 (Terminal 2) நுழைவு வாயில் வழியாக மட்டுமே உள்ளே நுழைய அனுமதிக்கப்படும்.

டெர்மினல் 4–ல் இருந்து வெளியே செல்லும் வாகனங்கள் செல்பவர்கள் சிரமத்தைத் தவிர்க்க, ஒரே ஒரு டோல்கேட் வழியாக மட்டும் வெளியே செல்ல சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

டெர்மினல் 1 மற்றும் டெர்மினல் 2 ஆகிய முனையங்கள் வழியாகப் பயணிக்கும் வாகனங்களுக்குத் தற்போதைய நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை. அவை வழக்கம் போல் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. விமான நிலைய விரிவாக்கப் பணிகளை விரைந்து முடிக்க ஏதுவாக இந்த தற்காலிக மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. எனவே, பயணிகள் தங்களின் பயண நேரத்தைத் திட்டமிடும்போது இந்த மாற்றங்களைக் கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## இனி நோ கடன், ஒன்லி கேஷ்! எண்ணெய் நிறுவனங்களின் அதிரடி நிபந்தனை?

புதுடெல்லி, மார்ச். 17–

பெட்ரோல், டீசல் விற்பனையில் இதுவரை இல்லாத ஒரு அதிரடி மாற்றத்தை, இந்தியாவின் முன்னணி எண்ணெய் நிறுவனங்களான IOCL, BPCL மற்றும் HPCL கையில் எடுத்துள்ளன. முதலில் பணம், பிறகுதான் எண்ணெய் என்ற Advance Payment Only என கறாரான விதியை டீலர்களுக்கு அமல்படுத்தியுள்ளன.

மத்திய கிழக்கு பகுதிகளில் கொழுந்துவிட்டு எரியும் போர் சூழலால் கச்சா எண்ணெய் விநியோகம் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. உலக சந்தையில் நிலவும் இந்த இக்கட்டான சூழலை சமாளிக்கவும், பணப்புழக்கத்தை தக்கவைக்கவும் இந்திய பொதுத்துறை நிறுவனங்கள் இந்த ப்ரீபெய்ட் முறையை தீவிரப்படுத்தியுள்ளன.

ஹார்மூஸ் ஜலசந்தி வழி மூடப்பட்டுள்ளதால், எண்ணெய் சப்ளையில் பல சிக்கல்கள் நிலவி வருகிறது. மாற்று வழிகளில் கொண்டு வரப்பட்டாலும், அதிலும் பல சவால்கள் நிலவி வருகின்றன. இந்த சூழலில் தான் இந்திய எண்ணெய் நிறுவனங்கள் நிதி பரிவர்த்தனையில் ஒரு அதிரடியான அறிவிப்பை கொடுத்துள்ளன.

ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் உள்ளிட்ட எண்ணெய் நிறுவனங்கள், எண்ணெய்க்கான பணத்தை முன்கூட்டியே செலுத்துமாறு கடந்த வாரம் முதலே வலியுறுத்த தொடங்கிவிட்டன. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனமும் அதன் டீலர்களுக்கு வழங்கி வந்த 5 நாள் கடன் வசதியை திங்கட்கிழமை முதல் நிறுத்தி விட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. எரிபொருளை பெறுவதற்கு டீலர்களுக்கு கொடுக்கப்பட்ட குறுகிய கால சலுகைகள், டீலர்களுக்கு சிக்கல்களை உருவாக்கலாம். மேற்கண்ட நிறுவனங்கள் இந்தியாவின் எரிபொருள் விநியோகத்தில் முக்கிய பங்கு வகித்து வரும் நிலையில், இந்த முடிவானது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஈரான் – இஸ்ரேல் இடையிலான போர் பதற்றம் காரணமாக ஹார்மூஸ் ஜலசந்தியில் ஏற்பட்டுள்ள தடை காரணமாக, சுமார் 40% எண்ணெய் விநியோகமானது பாதிக்கப்பட்டுள்ளது. உலகின் முன்னணி இறக்குமதியாளரான இந்தியாவுக்கு பல சவால்களை ஏற்படுத்தியுள்ளது. இதனிடையே 2027 ம் நிதியாண்டிற்குள் இந்தியாவின் பெட்ரோலிய பொருட்களுக்கான தேவை 250.8 மில்லியன் டன்களாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பெட்ரோல் பங்க் சில்லறை விற்பனை நிலையங்கள் மட்டுமின்றி, விவசாயம், போக்குவரத்து மற்றும் தொழில் துறையை சேர்ந்த மொத்தமாக எரிபொருள் வாங்குபவர்களும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். இவர்களில் பலர் கடனை நம்பியே செயல்படுபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து இந்திய பெட்ரோலிய டீலர்கள் கூட்டமைப்பின் (CIPD) தேசிய தலைவர் உதய லோத் கூறுகையில், மூன்று அரசு எண்ணெய் நிறுவனங்களும் முன்கூட்டியே பணம் செலுத்த கோர தொடங்கி விட்டன. இதற்கு முன்பு இந்த நிறுவனங்கள் சில நாட்களுக்கு கடன் வசதி வழங்கி வந்தன என கூறியுள்ளார். பொதுவாக, எண்ணெய் நிறுவனங்கள் டீலர்களுக்கு பல்வேறு கடன் வசதிகளை வழங்குகின்றன. ஒன்று அன்றைய கொள்முதலுக்கு அன்றைய தினமே பணம் செலுத்தி கொள்முதல் செய்வது. இரண்டாவது 3 முதல் 5 நாட்களுக்கு கடனாக எரிபொருள் வழங்கப்பட்டு, 6–வது நாள் பணம் வசூலித்தல். மூன்றாவது வங்கிகள் மூலம் கடன் வசதி செய்து தரப்பட்டு 15 முதல் 30 நாட்களுக்கு சலுகையும் வழங்கப்படுகிறது. டீலர்களின் கூற்றுப்படி, முதல் இரண்டு வசதிகளும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால், வங்கி மூலமான எலக்ட்ரானிக் டீலர் பைனான்ஸ் வசதி மட்டும் தற்போது தொடர்ந்து செயல்பாட்டில் உள்ளது. வரலாற்று ரீதியாக, இத்தகைய கடன் வசதிகளே சில்லறை விற்பனையாளர்கள் அதிக அளவில் எரிபொருளை கொள்முதல் செய்யவும், தங்களின் வழக்கமான பெரிய வாடிக்கையாளர்களுக்கு குறைந்த அளவிலான கடன் வழங்கவும் உதவியாக இருந்தன. ஆனால் தற்போது முன்கூட்டியே பணம் செலுத்த வேண்டி உள்ளதால், டீலர்களும் கடன் வழங்க முடியாது. ரொக்கமாக பணம் கொடுத்து வாங்க வேண்டிய சூழலே உள்ளது. இது குறுகிய காலத்தில் டீசர்களுக்கு சற்று பிரச்சனையாக இருக்கலாம். ஆனால் எண்ணெய் நிறுவனங்கள் நிலவி வரும் சவால்களை சமாளிக்க இது உதவிகரமாகவும் இருக்கும். எப்படி இருப்பினும் பொதுமக்களுக்கு இதனால் பிரச்சனை ஏதும் இருக்காது.

# தலையங்கம் — மதுரை மணி

**செவ்வாய்க்கிழமை 17.03.2026**
**விசுவாவசு தமிழ் வருடம்**
**பங்குனி மாதம் 03-ம் தேதி**

## சிலிண்டர் தட்டுப்பாட்ட விடுங்க!! நாட்டின் முதுகெலும்புக்கே பிரச்சினை வரப்போகுது!!






ஈரான் போர் காரணமாக இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் எல்பிஜி தட்டுப்பாடு நிலவுகிறது. போரால் ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டு வளைகுடா நாடுகளில் இருந்து இந்தியாவிற்கு வர வேண்டிய எல்பிஜி நிறுத்தப்பட்டதே இந்த தட்டுப்பாடுக்கு காரணம். மத்திய அரசு வீட்டு உபயோக பயன்பாட்டு சிலிண்டர் விநியோகத்திற்கு தான் முன்னுரிமை தர வேண்டுமென உத்தரவிட்டுள்ளது. இதனால் எண்ணெய் நிறுவனங்கள் வணிக சிலிண்டர் டெலிவரி மற்றும் ஆலைகளுக்கான எல்பிஜி விநியோகத்தை நிறுத்தியுள்ளன. இது இந்தியாவில் முதுகெலும்பாக கருதப்படும் விவசாயத்திற்கே பிரச்சினை ஏற்படுத்த தொடங்கியுள்ளது.

இந்தியா தனக்கு தேவையான யூரியா மற்றும் டிஏபி ஆகியவற்றை பெரும்பாலும் வெளிநாடுகளில் இருந்து தான் இறக்குமதி செய்கிறது. அதே வேளையில் உள்நாட்டில் உரம் தயாரிக்க எல்பிஜி கட்டாயம் தேவை. ஈரான் போர் இந்த இரண்டு விஷயங்களுக்குமே முட்டுக்கட்டை போட்டுள்ளது. ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டதால் இந்தியாவுக்கு எல்பிஜி வரத்து நிறுத்தப்பட்டிருப்பது. கடந்த ஆண்டு மட்டும் இந்தியா தனக்கு தேவையான 70 சதவீத உரத்தை ஓமன், சவுதி, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளில் இருந்து தான் இறக்குமதி செய்கிறது. இந்த கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக தான் வர வேண்டும். உலகின் இரண்டாவது பெரிய உர நுகர்வாளராக இந்தியா திகழ்கிறது. கப்பல்கள் போக்குவரத்து நிறுத்தம் இந்தியாவில் உரத்தட்டுப்பாடு ஏற்படும் அபாயத்தை உண்டாக்கியுள்ளது. மத்திய அரசு இந்த பிரச்சினையை சமாளிக்க உரக் கொள்முதல் திட்டத்தில் சில அதிரடி மாற்றங்களை செய்திருக்கிறது. வழக்கமாக உரம் வாங்கும் நாடுகளுக்கு பதிலாக இந்தியா தற்போது இந்தோனேஷியா, பெலாரஸ், சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளில் இருந்து உரங்களை கொள்முதல் செய்ய முடிவு செய்துள்ளது. வழக்கத்தை விட இங்கிருந்து இரண்டு மடங்கு அதிகமாக உரம் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஈரான் போர் காரணமாக விநியோக சங்கிலியில் ஏற்பட்ட தடங்கல், உள்நாட்டில் விவசாயிகளுக்கு உரத்தட்டுப்பாட்டை ஏற்படுத்திவிடும் என்பதால் மத்திய அரசு இந்த நடவடிக்கையை கையில் எடுத்துள்ளது.

மேலும் யூரியா மற்றும் பொட்டாஷ் போன்ற உரங்களின் கையிருப்பை உறுதி செய்ய மத்திய அரசு மாற்று ஏற்பாடுகளை யோசித்திருக்கிறது. மேற்கத்திய நாடுகளின் தடை இருந்தாலும் கூட இந்தியாவின் உணவு பாதுகாப்பை உறுதி செய்ய ரஷ்யாவிடம் இருந்து தொடர்ந்து உரங்களை வாங்க மத்திய அரசு முன்னுரிமை தருகிறது. இந்திய விவசாயிகளுக்கு ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரை அதிக உரம் தேவை. அது கிடைக்கவில்லை என்றால் உள்நாட்டில் உரங்களின் விலை உயரும் இது விவசாயத்தையும் உணவு பாதுகாப்பையும் பாதிக்கும். இதனால் குறைந்த விலையில் தடை இன்றி உரம் கிடைக்க ஒரே நாட்டை சார்ந்து இருக்காமல் உர கொள்முதலை பரவலாக்க அரசு முடிவு செய்துள்ளது.

இந்தியாவுக்கு தேவையான உரத்தில் 70% ஹார்முஸ் ஜலசந்தி வழியாக தான் வரவேண்டும். ஆனால் அது தற்போது நிறுத்தப்பட்டு இருக்கிறது. மத்திய, மாநில அரசுகளிடம் தொடர்ந்து உரம் கிடைப்பது உறுதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகளும் உரம் தயாரிப்பு மற்றும் விற்பனை நிறுவனங்களும் கேட்டுக் கொண்டுள்ளன. தட்டுப்பாடு காரணமாக எண்ணெய் நிறுவனங்கள் வீட்டு உபயோக பயன்பாட்டு சிலிண்டர் டெலிவரிக்கு தான் முன்னுரிமை தர வேண்டும் என மத்திய அரசு அறிவித்துவிட்டது இதனால் உரம் தயாரிப்பு நிறுவனங்களுக்கு எல்பிஜி விநியோகம் நிறுத்தப்பட்டு இருக்கிறது. இது உரம் உற்பத்தியை குறைத்துவிட்டது. எனவே வெளிநாடுகளில் இருந்து தான் இதனை இறக்குமதி செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கிறது.

## பாண்டியன் நகரில் திமுக சார்பில் ஆர்ப்பாட்டம்!



திருப்பூர், மார்ச். 17–

திருப்பூர் வடக்கு மாவட்ட திமுக வடக்கு மாநகரம் பாண்டியன் நகர் பகுதி கழகம் சார்பில் பாண்டியன் நகர் பஸ் நிறுத்தம் அருகில் மத்திய பாஜக அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையாலும், போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததாலும் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாட்டைக் கண்டித்தும், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் மத்திய அரசு கூட்டணியையும் கண்டித்து 'மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி' சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் பகுதி செயலாளர் வெ. ஜோதி தலைமையிலும் வடக்கு மாநகரச் செயலாளர் ஈ.தங்கராஜ். மாநகர மகளிர் தொண்டரணி அமைப்பாளர் காளீஸ்வரி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது இதில் மாமன்ற உறுப்பினர்கள் கோபால்சாமி. மாலதி கேபிள் ராஜ். வேலம்மாள் வி வி ஜி காந்தி. லோகநாயகி கருப்புசாமி. திமுக வார்டு செயலாளர்கள் செந்தில்குமார்.மூர்த்தி. சுரேஷ்.பாப்புச்சாமி. ஆர் ஆர் செல்வராஜ். வெள்ளைச்சாமி. மற்றும் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலன் பகுதி இளைஞரணி செயலாளர் பிடி ஆர் பிரகாஷ் மற்றும் மாவட்ட மாநகர நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## அரசு ஊழியர்களே கவனிங்க! ஏப்ரல் 1 முதல் PLI பாலிசியில் முக்கிய மாற்றம்?

புதுடெல்லி, மார்ச். 17–

அரசு ஊழியர்களுக்கு அஞ்சல் ஆயுள் காப்பீடு என்பது மிகச்சிறந்த மற்றும் பாதுகாப்பான காப்பீட்டுத் திட்டமாகும். ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் இத்திட்டத்தில் முக்கிய மாற்றம் அமலுக்கு வர உள்ளது. இதுவரை இத்திட்டத்தில் பாலிசி எடுக்கும் அரசு ஊழியர்களுக்கு, அவர்களது மாதாந்திரச் சம்பளத்திலேயே பிரீமியத் தொகையைப் பிடித்தம் செய்யும் 'Pay Recovery Mode' வசதி இருந்து வந்தது. வரும் 01.04.2026 முதல் தொடங்கப்படும் புதிய PLI பாலிசிகளுக்கு, அஞ்சல் துறை ஊழியர்களைத் தவிர்த்து மற்ற மத்திய, மாநில அரசு மற்றும் பொதுத்துறை ஊழியர்களுக்கு இந்தச் சம்பளப் பிடித்தம் முறை நிறுத்தப்படுகிறது. இது குறித்த கூடுதல் விவரங்கள் மற்றும் மாற்று வழிகள் கீழே விரிவாக பார்க்கலாம்.

**சம்பளப் பிடித்தம் நிறுத்தப்படுவதற்கான காரணம் என்ன?**

மத்திய காப்பீட்டு இயக்குநரகம் வெளியிட்டுள்ள இந்த அறிவிப்பு, காப்பீட்டுச் சேவைகளை முழுமையாக டிஜிட்டல் மயமாக்கும் நோக்கத்துடன் கொண்டு வரப்பட்டுள்ளது. சம்பளத்தில் பிடித்தம் செய்யும் முறையில், சில நேரங்களில் துறை ரீதியான காலதாமதங்கள் அல்லது கணக்குப் பதிவுகளில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதனைத் தவிர்க்கவும், பாலிசிதாரர்கள் நேரடியாகத் தங்களது பிரீமியத்தைச் செலுத்தி, உடனுக்குடன் ரசீது மற்றும் தகவல்களைப் பெறுவதை உறுதி செய்யவும் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.




**யார் பாதிக்கப்படுவார்கள்? யார் பாதிக்கப்பட மாட்டார்கள்?**

அஞ்சல் துறை ஊழியர்களுக்கு வழக்கம் போல் தங்களது சம்பளத்திலேயே பிரீமியத்தைப் பிடித்தம் செய்யும் வசதி தொடரும். ரயில்வே, பாதுகாப்புத் துறை, மத்திய/மாநில அரசு ஊழியர்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள், வரும் ஏப்ரல் 1–க்குப் பிறகு எடுக்கும் புதிய பாலிசிகளுக்கு இந்த வசதியைப் பயன்படுத்த முடியாது. ஏற்கனவே பாலிசி எடுத்துச் சம்பளத்தில் பிடித்தம் செய்து வருபவர்களுக்கு இந்த மாற்றம் இப்போதைக்குக் கிடையாது. அவர்கள் பழைய முறையிலேயே தொடரலாம்.

**பாலிசிதாரர்களுக்கான மாற்று வழிகள்**

புதிய பாலிசி எடுப்பவர்கள் ஏப்ரல் 1 முதல் கீழ்க்கண்ட டிஜிட்டல் முறைகளில் பிரீமியத்தைச் செலுத்த வேண்டும்:

1. NACH (National Automated Clearing House):

இதுவே மிகச் சிறந்த மாற்றாகும். உங்கள் வங்கிச் கணக்கிலிருந்து (POSB, IPPB அல்லது இதர வங்கிகள்) தானாகவே பிரீமியம் பிடித்தம் செய்யப்பட இதற்கு 'Standing Instruction' வழங்கலாம்.

2. PLI Customer Portal: ஆன்லைன் போர்டல் மூலம் நெட் பேங்கிங், டெபிட் கார்டு அல்லது கிரெடிட் கார்டு பயன்படுத்திச் செலுத்தலாம்.

3. IPPB Mobile App: இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கி செயலி மூலம் நொடிப்பொழுதில் பிரீமியம் கட்ட முடியும்.

4. நேரடியாக செலுத்துதல்: அருகில் உள்ள எந்தவொரு அஞ்சலகத்திலும் நேரடியாகச் சென்று பணமாகவோ அல்லது காசோலையாகவோ செலுத்தலாம்.

இந்த மாற்றத்தினால் ஏற்படும் நன்மைகள்

சம்பளப் பிடித்தம் நிறுத்தப்படுவது சிலருக்குச் சிரமமாகத் தோன்றினாலும், இதில் சில நடைமுறை நன்மைகள் உள்ளன. உங்கள் பிரீமியம் சரியான தேதியில் செலுத்தப்படுகிறதா என்பதை நீங்களே கண்காணிக்க முடியும். மேலும், துறை மாறுதல் அல்லது பணி ஓய்வு போன்ற நேரங்களில், சம்பளப் பிடித்தம் நின்று போவதால் பாலிசி லேப்ஸ் (Lapse) ஆகும் அபாயம் இதில் குறையும். டிஜிட்டல் முறையில் செலுத்தும்போது, உடனடி 'E–Receipt' கிடைப்பதுடன் உங்கள் கணக்கில் வரவு வைக்கப்பட்ட விவரம் எஸ்.எம்.எஸ் மூலம் உறுதி செய்யப்படும். அஞ்சல் ஆயுள் காப்பீடு என்பது மிகக் குறைந்த பிரீமியத்தில் அதிக போனஸ் வழங்கும் ஒரு திட்டமாகும். இந்த புதிய விதிமுறை மாற்றத்தால் பாலிசியின் நன்மைகளிலோ அல்லது போனஸ் விகிதத்திலோ எந்த மாற்றமும் இல்லை; பணம் செலுத்தும் முறையில் மட்டுமே மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே, புதிய பாலிசி எடுக்கத் திட்டமிட்டுள்ள அரசு ஊழியர்கள், ஏப்ரல் 1 ஆம் தேதிக்கு முன்னரே தங்களது விருப்பத் தேர்வை (Pay Recovery) முடிவு செய்து கொள்வது நல்லது. அதன் பிறகு பாலிசி எடுப்பவர்கள், வங்கி மூலம் தானாகப் பணம் செலுத்தும் (NACH) வசதியைப் பயன்படுத்திக் கொள்வதே புத்திசாலித்தனமாகும்.

## 24 பேருக்கு சாகித்ய அகாடமி விருது!



புதுடெல்லி, மார்ச். 17–

'தமிழ் சிறுகதைகளின் தடங்கள்' என்ற நூலுக்காக எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வனுக்கு 2025–ம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 1954–ம் ஆண்டில் மத்திய அரசு சார்பில் சாகித்ய அகாடமி நிறுவப்பட்டது. இந்த அமைப்பு சார்பில் இந்தியாவின் அதிகாரப்பூர்வமான 24 மொழிகளில் சிறந்த கவிதை, நாவல், சிறுகதை, இலக்கிய ஆய்வுகளுக்கு ஆண்டு தோறும் சாகித்யஅகாடமி விருது வழங்கப்படுகிறது. இது, இலக்கியத்துக்கான உயரிய விருதாக திகழ்கிறது.

இந்நிலையில், 2025–ம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதுகள் நேற்று அறிவிக்கப்பட்டன.இதில், 'தமிழ் சிறுகதைகளின் தடங்கள்' என்ற நூலுக்காக எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வனுக்கு சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது. எட்டு கவிதை தொகுப்புகள், 4 நாவல்கள், 6 சிறுகதைகள், 2 கட்டுரைகள், 2 நினைவுக் குறிப்புகள், ஒரு இலக்கிய விமர்சனம், ஒரு சுயசரிதை ஆகியவை சாகித்ய அகாடமி விருதை பெற்றுள்ளன.

குறிப்பாக, தெலுங்கு எழுத்தாளர் நந்தினி சித்தா ரெட்டி, மலையாள எழுத்தாளர் பிரபாகரன், கன்னட எழுத்தாளர் அமரேஷ் நுகடோனி, இந்தி எழுத்தாளர் மம்தா காலியா உட்பட மொத்தம் 24 பேர் சாகித்ய அகாடமி விருதை வென்றுள்ளனர். அவர்களுக்கு செப்பு பட்டயம், பொன்னாடை, ரூ.1 லட்சம் ரொக்கப் பரிசு ஆகியவை வழங்கப்பட உள்ளன இவரது முதல் கவிதையான 'ஒரு நாள் டைரி' கடந்த 1972–ம் ஆண்டில் வெளியானது. இவரது 'வெயிலோடு போய்' எனும் சிறுகதை, தமிழில் வெளிவந்த சிறுகதைகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த கதையை அடிப்படையாகக் கொண்டு 'பூ' என்ற திரைப்படம் வெளியானது. இந்த திரைப்படத்துக்காக தமிழக அரசு கடந்த 2008–ம் ஆண்டுக்கான சிறந்த கதாசிரியர் விருதை தமிழ்ச்செல்வனுக்கு வழங்கியது.


## சோழவந்தான் அருகே கருப்பட்டி பள்ளிவாசலில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி!



சோழவந்தான், மார்ச். 17–

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே கருப்பட்டி முகைதீன் ஆண்டவர் பள்ளிவா சலில் அகில இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது மாவட்ட தலைவர் நூர் முகமது அமைப்புசாரா தொழிலாளர் காங்கிரஸ் மாநில தலைவர் மகேஷ்வரன் தலைமை வகித்தார்கள். ஜமாத் தலைவர் அப்பாஸ் செயலாளர் காதர் மைதீன் மாவட்ட துணைத்தலைவர் குருசாமி மாநில துணைத்தலைவர்ஜெயராமு முன்னிலை வகித்தனர். ஏற்பாடுகளை மாவட்டத் துணைத் தலைவர் வருசை முகமது (ஏஐயுடபிள்யுஇசி) செய்திருந்தார்.

இதில் நிர்வாகிகள் வட்டார காங்கிரஸ் தலைவர்கள் ஐ.கே. குருநாதன், சுப்பாராயல் பழனிவேல் செந்தில்குமார் காந்தி மாநிலபொதுக்குழு உறுப்பினர் ஜெயமணி அமைப்புசாரா தொழிலாளர் மாவட்ட தலைவர் சோணைமுத்து இளைஞர் காங்கிரஸ் மாவட்ட தலைவர் மணிவண்ணன் மகிளா காங்கிரஸ் மாவட்ட தலைவி செல்லப்பா சரவணன் ஓ பி சி பிரிவு மாநில செயலாளர் நித்யபிரியா ஓ பி சி பிரிவு மாநில பொதுச் செயலாளர் நூர் முகமது, முகமது இலியாஸ் முருகன் புரோஸ்கான் அபுதாஹிர் நசீர் இக்பால் கணேசன் சோலை அய்யங்கோட்டை பாலமுருகன் ராஜா இளவரசன் தேமுதிக நல் கர்ணன்மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் மாவட்ட நிர்வாகிகள் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





## சனி கிரகம் பலவீனமாக இருப்பதை குறிக்கும் அறிகுறிகள் /பரிகாரங்கள்!



வேத ஜோதிடத்தில் சனி பகவான், தனி நபரின் கர்ம வினைகளுக்கு ஏற்ப கலவையான பலன்களை அளிக்கும் நீதி அரசனாக பார்க்கப்படுகிறார். தனி ஒரு நபரின் ஜாதகத்தில் சனி கிரகத்தின் நிலையை பொறுத்து, அவர்களுக்கான பலன்கள் மாறுபடும். இந்த வகையில், உங்கள் ஜாதகத்தில் சனி பகவானின் நிலை என்ன? உங்களுக்கு சாதகமாக இருக்கிறாரா? அல்லது பாதகமாக இருக்கிறாரா? என்பதை ஒரு சில அறிகுறிகள் வைத்து புரிந்துக்கொள்ள முடியும் எனவும், வாழ்க்கை முறை மாற்றங்களை கொண்டு பிரச்சனைக்கான பரிகாரம் காண முடியும் எனவும் நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

**சனி தேவன் சாதகமற்ற நிலையில் இருப்பதை தெரிவிக்கும் அறிகுறிகள்!**

அதீத சோர்வு: உங்கள் வழக்கமான பணிகளையும் செய்ய முடியாத அளவுக்கு அதீத சோர்வு, தொய்வு, உடல் வலி போன்ற பிரச்சனைகள் காணப்படும்.

விதிகளை மீறும் செயல்: சாலை விதிகளை மீறுவதில் தொடங்கி, தவறான பழக்க வழக்கங்கள், சகவாசங்கள் என சமூக விதிகளை மீறுவது போன்ற விஷயங்கள் உங்கள் வாழ்க்கையில் அடிக்கடி நடக்கும்.

கவனக்குறைவு: கவனச்சிதறல், குழப்பம், தெளிவான முடிவுகளை எடுப்பதில் சிக்கல் போன்றவை இயல்பான ஒன்றாக உங்கள் வாழ்க்கையில் மாறும்.

ஆரோக்கிய பிரச்சனைகள்: உங்கள் ஜாதகத்தில் சனி பகவான் சாதகமற்ற நிலையில் இருக்க, நாள்பட்ட நோய் பிரச்சனைகள் உட்பட சில ஆரோக்கிய பிரச்சனைகள் உங்கள் வாழ்க்கையில் வந்துச் செல்லக் கூடும்.

நிதி நெருக்கடி: சனி பகவானின் சாதகமற்ற நிலை உங்கள் பொருளாதார நிலையை எதிர்மறையாக பாதிக்கும். கடன் பிரச்சனைகளை அதிகரிக்கும், எதிர்பாராத செலவுகளையும் கொண்டு வரும்.

வாக்குவாதம் அதிகரிக்கும்: பணியிடத்தில் சக ஊழியர்களுடன் வாக்குவாதம் அதிகரிக்கும், தேவையற்ற தலைப்புகளில் பிரச்சனை உண்டாகும். அதேப்போன்று, குடும்ப வாழ்க்கையில் கணவன் – மனைவி இடையே வாக்குவாதங்கள் அதிகரிக்கும். மனஸ்தாபங்களும் உண்டாகும்.

பதற்றம்: சனி தேவனின் சாதகமற்ற நிலை உங்கள் மன அழுத்தம், பதற்றத்தை அதிகரிக்கும். இதன் தாக்கம் தெளிவான முடிவு எடுக்க விடாது உங்களை தடுக்கும்.

ஷத்ரிபு: ஷத்ரிபு எனப்படுவது மனிதர்களை ஆட்டிப்படைக்கும் ஆறு விஷயங்களை குறிக்கிறது. அதாவது ஆசைகள், கோபம், பேராசை, பற்று, பொறாமை மற்றும் ஈகோ எனும் 6 விஷயங்களை உங்கள் வாழ்க்கையில் அதிகரிக்கும்.

**பரிகாரம் ஏதும் உள்ளதா?**

சனி பகவானின் சாதகமற்ற நிலையை மேற்காணும் அறிகுறிகள் கொண்டு புரிந்துக் கொள்ளும் அதேநேரம், நடைமுறை வாழ்க்கைக்கு பொருந்தும் எளிய பரிகாரங்கள் மூலம் இவற்றை சமாளிக்க முடியும் என நம்பப்படுகிறது!

சனி பகவானை மகிழ்விக்கும் வகையில் சனிக்கிழமை தோறும் கோவில் சென்று, சனி பகவானை முறையாக வழிபடுங்கள். கருப்பு எள், கருப்பு ஆடை, கடுகு எண்ணெய் என கருப்பு நிற பொருட்களை மற்றவர்களுக்கு தானமாக அளியுங்கள்.

காகத்திற்கு எள் கலந்த சாதம் உணவாக அளிக்கலாம். கருப்பு நாய் மற்றும் குரங்குகளுக்கு உணவு வைப்பதும் உதவியாக இருக்கும்.

சனியின் எதிர்மறையான விளைவுகளை சமாளிக்க 'ஹனுமன் சாலிசா பக்தி வரிகளை' உச்சரியுங்கள்.

தினமும் 108 முறை 'ஓம் ஷாம் சனிச்சராய நமஹ' எனும் மந்திரத்தை உச்சரித்து, சனி பகவானை நினைவு கூறுங்கள்.

சனிக்கிழமைகளில் அரச மரத்திற்கு அடியில் கடுகு எண்ணெய் பயன்படுத்தி தீபம் ஏற்றி வாருங்கள்.

வயதில் மூத்தவர்களுக்கு அளிக்க வேண்டிய மரியாதையை அளிப்பது அவசியம். அதேப்போன்று ஒழுக்கமான விஷயங்களை கடைப்பிடிப்பதும் அவசியம்.

மூன்றாம் நபரின் வார்த்தைகளை கண்மூடித் தனமாக நம்ப வேண்டாம்; உங்கள் உழைப்பின் மீது நம்பிக்கை வையுங்கள். கடின உழைப்புக்கான பலனை காணுங்கள்!

**பொறுப்புத் துறப்பு:**

இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொதுவான ஜோதிட நம்பிக்கை மற்றும் மரபு வழி நம்பிக்கைகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன. அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டவை அல்ல!

## முத்தாயம்மாள் இன்ஸ்டிடியூசனில் ஆண்டு விழா கொண்டாட்டம்!




நாமக்கல், மார்ச். 17–

இராசிபுரம் – வநேத்ரா முத்தாயம்மாள் இன்ஸ்டிடியூசனில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 32–வது ஆண்டு விழா, பாலிடெக்னிக் இன்ஸ்டிடியூஷனின் 15–வது மற்றும் கல்வியியல் கல்லூரியின் 11–வது ஆண்டு விழாவானது "கலாச்சார விழா–2026" என்ற தலைப்பில் வெகு விமரிசையாக கல்லூரி வளாகத்தில் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக விஜய் டிவியின் சின்னத்திரை பிரபலங்களான தொலைக்காட்சி அறிவிப்பாளரும், சின்னத்திரை நடிகருமான திரு. கதிர், சின்னத்திரை நடிகை வெண்பா மற்றும் சமூக வலைத்தள பிரபலமும், நடன கலைஞரும் சின்னத்திரை நடிகையுமான ஸ்வேதா சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று மாணவர்களிடையே நடனமாடியும் சிறப்பாக உரையாடியும் அவர்களை உற்சாகப்படுத்தினர்.

முன்னதாக விழாவில் கல்லூரியின் தாளாளர் திரு.கே.பி.இராமசுவாமி, அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இதனைத் தொடர்ந்து கல்லூரியில் 10, 20 மற்றும் 30 ஆண்டுகள் பணியாற்றிய பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, சிறப்பு ஊக்கத்தொகைகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் தாளாளருடன் இணைந்து கல்லூரியின் முத்தாயம்மாள் கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் திரு. இரா. முத்துவேல், செயலாளர் திருமதி. ச.மஞ்சு, இயக்குநர் – கல்வி முனைவர்.இரா. செல்வகுமரன், கலைக் கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ்.பி.விஜயகுமார் மற்றும் துணைமுதல்வர் முனைவர் ஆ.ஸ்டல்லா பேபி, பாலிடெக்னிக் இன்ஸ்டிடியூசனின் முதல்வர் முனைவர். இரா.மணி மற்றும் கல்வியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் ம.மருதை ஆகியோரும் இணைந்து சிறப்பு பரிசுகளையும் வழங்கினர். விழாவின் தொடக்கமாக கல்லூரி முதல்வர்கள் மூவரும் ஆண்டறிக்கைகளை வாசித்தனர். இதனைத் தொடர்ந்து மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதில் கல்லூரி இசைக் குழுவின் இன்னிசை நிகழ்ச்சி, குழு நடனங்கள், பேஷன் ஷோ ஆகியவை இடம் பெற்றிருந்தன.

விழாவில் ஏராளமான மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டு கலை நிகழ்ச்சிகளை கண்டுகளித்து விழாவைச் சிறப்பித்தனர்.

## கொங்கு மண்டல வியாபாரிகள் சங்க நிறுவன தலைவர் வலியுறுத்தல்!



திருப்பூர், மார்ச்.17–

கொங்கு மண்டல வியாபாரிகள் சங்க நிறுவன தலைவர் மகிஷா ரமேஷ் குமார், தேர்தல் கமிஷன் தலைமை அதிகாரிக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறப்பட்டு உள்ளதாவது:– திருப்பூர் மாவட்டத்தில் வியாபாரிகள் சிறு, குறு மற்றும் நடுத்தர கடை வைத்துநடத்திவருகிறார்கள். இவர்கள், தனது கடையில் இருந்து 5 கி.மீ தொலைவில் சென்று தான் மளிகை பொருட்களை கொள்முதல் செய்ய வேண்டிய நிலை உள்ளது.மேலும் வியாபாரிகள் ரொக்கமாக பணம் கொண்டு வந்து கடைவீதியில் அரிசி, மளிகை, காய்கறி போன்ற பொருட்கள் தினமும் கொள்முதல் செய்து வருகிறார்கள். தற்போது சட்ட மன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு உள்ளதால், தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளது. இதனால் ரூ.50 ஆயிரத் துக்கு மேல் பணம் கொண்டு சென்றால் பறிமுதல் செய்யப் படுகிறது. மேலும் கடந்த 2019–ம் ஆண்டில், மளிகை பொருட்களின் விலை குறைவாக இருந்தது. ஆனால் தற்போது அதன் விலை பல மடங்கு அதிகரித்து உள்ளது. எனவே வியாபாரிகளின் நலனை கருத்தில் கொண்டு ரூ.1 லட்சம் வரை எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும். இவ்வாறு மனுவில் அவர் கூறி உள்ளார்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## காலையில் இந்த 3 தவறுகளை செய்துவிடாதீங்க..! அது கல்லீரலை மோசமாக பாதிக்கும்!?



கல்லீரல் என்பது மனித உடலில் உள்ள மிகப்பெரிய உறுப்பாகும். இது நமது உடலில் பல முக்கிய செயல்பாடுகளைச் செய்கிறது. சில சமயங்களில், கல்லீரல் பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்தாலும் கூட, தன்னைத்தானே சரிசெய்து மீண்டு வரும் ஆற்றல் இந்த உறுப்பிற்கு மட்டுமே உண்டு. நமது உடலில் குளுக்கோஸை வெளியிடுவதிலும், உடலின் கட்டமைப்புக்குத் தேவையான சில ஹார்மோன்களை உற்பத்தி செய்வதிலும் கல்லீரல் முக்கியப் பங்கு வகிக்கிறது.

இது தவிர, கல்லீரல் நமது உடலில் உள்ள தீங்கு விளைவிக்கும் கழிவுகளை வடிகட்டி வெளியேற்றுகிறது. உணவு, மருந்துகள் மற்றும் சுற்றுச்சூழல் மாசு ஆகியவற்றின் மூலம் உடலுக்குள் நுழையும் நச்சுகளைக் கல்லீரல் சுத்திகரிக்கிறது. நமது உடலில் பல முக்கிய செயல்பாடுகளைச் செய்யும் இந்தக் கல்லீரல் பாதிக்கப்பட்டால், அது உயிருக்கே ஆபத்தான நிலையை உருவாக்கக்கூடும். குறிப்பாக, நாம் தினமும் காலையில் செய்யும் 3 தவறுகள் கல்லீரல் தொடர்பான பிரச்சனைகளுக்குக் காரணமாக அமைகின்றன.

### காலை உணவைத் தவிர்த்தல்

இன்றைய பரபரப்பான வாழ்க்கை முறையில், பலர் காலை உணவைத் தவிர்த்துவிடுகின்றனர். இரவு நேரப் பணி காரணமாக, பலரால் இரவில் தூங்க முடிவதில்லை; இதனால் அவர்கள் காலை 11 மணி வரை படுக்கையிலேயே இருக்கின்றனர். சிலர் வேலைக்குச் சீக்கிரம் செல்ல வேண்டியிருப்பதால் காலை உணவைத் தவிர்க்கின்றனர்; வேறு சிலர் உடல் எடையைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் காலை உணவைத் தவிர்த்துவிடுகின்றனர்.

ஆனால், நீண்ட நேரம் வெறும் வயிற்றிலேயே இருப்பது உடலில் மன அழுத்த ஹார்மோன்களின் அளவை அதிகரிக்கிறது. இது கல்லீரலின் செயல்பாட்டைப் பாதிக்கிறது. காலையில் உடலுக்குத் தேவையான சரியான ஊட்டச்சத்துக்கள் கிடைக்கவில்லை என்றால், வளர்சிதை மாற்றமும் (metabolism) பாதிக்கப்படுகிறது. அதனால்தான், காலையில் லேசான அதே சமயம் ஊட்டச்சத்து நிறைந்த காலை உணவை உட்கொள்ளுமாறு நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.

### அதிக இனிப்பு நிறைந்த காலை உணவு

சிலர் காலை உணவாக ரொட்டி, ஜாம், கேக்குகள், மஃபின்கள் மற்றும் அதிக அளவு சர்க்கரை நிறைந்த பிற உணவுகளைச் சாப்பிடுகின்றனர். இது கல்லீரலில் மிகத் தீவிரமான எதிர்மறை விளைவை ஏற்படுத்துகிறது. இந்த உணவுகள் சுவையாக இருந்தாலும், இவற்றைத் தொடர்ந்து நீண்ட காலத்திற்குச் சாப்பிட்டு வந்தால் கல்லீரல் பாதிக்கப்படக்கூடும். குறிப்பாக, இவற்றில் உள்ள அதிகப்படியான 'ஃப்ரக்டோஸ்' (fructose) சத்து கல்லீரலுக்குக் கூடுதல் சுமையை ஏற்படுத்துகிறது. உடலுக்குள் அதிகப்படியான சர்க்கரை சென்றால், அதன் பெரும்பகுதி கல்லீரலிலேயே வைத்துச் செயலாக்கப்படுகிறது. இது காலப்போக்கில் கல்லீரலில் கொழுப்பு படிவதற்கான அபாயத்தை அதிகரிக்கிறது.

இறுதியில், 'ஃபேட்டி லிவர்' (Fatty Liver) எனப்படும் கல்லீரல் கொழுப்புப் பிரச்சனை முற்றிய நிலையில், 'கல்லீரல் இழைநார் வளர்ச்சி' (Liver Cirrhosis) போன்ற தீவிரமான நோய்களுக்கு வழிவகுக்கக்கூடும். அதனால்தான், காலையில் புரதம் மற்றும் நார்ச்சத்து நிறைந்த உணவுகளைச் சாப்பிடுவது ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது.

### காலையில் உடற்பயிற்சி செய்யாமை

காலையில் தூக்கத்திலிருந்து எழுந்த பிறகும் நீண்ட நேரம் ஒரே இடத்தில் அமர்ந்திருப்பதும், அலைபேசியைப் பார்ப்பதிலேயே அதிக நேரத்தைச் செலவிடுவதும் உடல் ஆரோக்கியத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய செயல்களாகும். உடல் இவ்வாறு முழுமையாகச் சுறுசுறுப்புடன் இயங்கவில்லை என்றால், உடலின் வளர்சிதை மாற்றம் (metabolism) மந்தமடைந்துவிடுகிறது.

காலையில் மிதமான உடற்பயிற்சிகளைச் செய்வது கல்லீரலின் ஆரோக்கியத்திற்கு நல்லது என்று நிபுணர்கள் கூறுகின்றனர். நீங்கள் தினமும் குறைந்தது அரை மணி நேரமாவது நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். காலையில் நடைப்பயிற்சி, உடலை நீட்டிக்கும் பயிற்சிகள் அல்லது யோகா ஆகியவற்றைச் செய்வது, உடலின் உறுப்புகளுக்குச் செல்லும் ரத்த ஓட்டத்தை மேம்படுத்துகிறது. இது கல்லீரலின் செயல்பாட்டையும் மேம்படுத்துகிறது.

# ஆஸ்திரேலியாவுடன் இணைந்து இந்தியா புது ரூட்... எஃகு தயாரிப்பில் நிலக்கரிக்கு மாற்று கண்டுபிடிப்பு!



புதுடெல்லி, மார்ச். 17–

எஃகு உற்பத்தியில் ஏற்படும் கார்பன் உமிழ்வை குறைக்க, நிலக்கரியின் ஒரு பகுதியை விவசாய கழிவுகளால் மாற்றும் புதிய முறையை இந்தியா–ஆஸ்திரேலியா விஞ்ஞானிகள் வெற்றிகரமாக சோதித்து காட்டியுள்ளனர். இந்த முயற்சி, இந்தியாவில் பசுமை எஃகு (Green Steel) தயாரிப்புக்கு முக்கியமான முன்னேற்றமாக கருதப்படுகிறது.

இந்த ஆய்வை Indian Institute of Science (IISc) மற்றும் ஆஸ்திரேலியாவின் தேசிய அறிவியல் நிறுவனம் CSIRO இணைந்து மேற்கொண்டன. உலகில் முதல்முறையாக நடத்தப்பட்ட இந்த சோதனை, தொழில்துறை அளவிலும் இந்த முறையை பயன்படுத்த முடியும் என்பதை நிரூபித்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். உலகளவில் எஃகு உற்பத்தித் துறை alone மொத்த கார்பன் உமிழ்வில் சுமார் 10% வரை காரணமாக இருப்பதாக கூறப்படுகிறது. எனவே இந்த துறையில் உமிழ்வை குறைப்பது மிகவும் அவசியமாகியுள்ளது. இந்த முயற்சியில், நெல் தோல் (Rice Husk) போன்ற விவசாய கழிவுகளை சிறப்பு முறையில் பெலெட் (pellet) வடிவமாக மாற்றி பயன்படுத்தினர். இதை எரிப்பதன் மூலம் உருவாகும் சிங்காஸ் (syngas) என்ற வாயுவை பயன்படுத்தி இரும்புத் தாதுவை (iron ore) குறைக்கும் செயல்முறை வெற்றிகரமாக நடந்தது.

# "அமெரிக்க குடியுரிமை சரண்டருக்கு 80% ஆஃபர்"... இந்திய பாஸ்போர்ட் வாங்க வரிசை கட்டி நிற்பார்களா?




அமெரிக்கா, மார்ச். 17–

அமெரிக்க குடியுரிமையை அதிகாரப்பூர்வமாக துறக்க விரும்புபவர்களிடம் வசூலிக்கப்படும் கட்டணத்தை அமெரிக்க அரசு 80 சதவீதத்திற்கும் அதிகமாக குறைக்க முடிவு செய்துள்ளது.

அமெரிக்க வரி விதிமுறைகளால் சிக்கலில் சிக்கியுள்ள "Accidental Americans" என அழைக்கப்படும் பலருக்கு இந்த முடிவு வரவேற்பைப் பெற்றுள்ளது.

உதாரணத்திற்கு, ஒரு இந்திய குடும்பம் தற்காலிகமாக அமெரிக்காவில் இருந்தபோது குழந்தை பிறந்தால், அந்த குழந்தைக்கு தானாகவே அமெரிக்க குடியுரிமை கிடைக்கும்.

ஆனால் அந்த குழந்தை பிறகு இந்தியாவில் வளர்ந்து வாழ்ந்தாலும் சட்டப்படி அவர் இன்னும் அமெரிக்க குடியுரிமையாளர் தான்.

இதனால் அவர்களுக்கு அமெரிக்க வரி விதிமுறைகள் மற்றும் வங்கி கணக்கு தகவல் தெரிவிப்பு போன்ற சட்டங்கள் பொருந்தும். இந்த காரணத்தால் பலர் பின்னர் அமெரிக்க குடியுரிமையை துறக்க முயற்சிக்கிறார்கள்.

அமெரிக்க குடியுரிமையை துறக்கும் போது தற்போது வசூலிக்கப்படும் 2,350 அமெரிக்க டாலர் (சுமார் ரூ.2 லட்சம்) கட்டணம் 450 டாலராக (சுமார் ரூ. 41000) குறைக்கப்படுகிறது. இந்த புதிய கட்டணம் ஏப்ரல் 13 முதல் அமலுக்கு வரும் என அமெரிக்க அரசின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியீடான Federal Register–ல் வெளியிடப்பட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டணம் 2015 ஆம் ஆண்டு அதிகரிக்கப்பட்டிருந்தது. தற்போது அந்த உயர்வை ரத்து செய்து, 2010 ஆம் ஆண்டு முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட கட்டண நிலைக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வாழும் பல அமெரிக்கர்களுக்கு வரி தொடர்பான சிக்கல்கள் இருப்பதாக கிடைத்த பல தகவல்களை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

பாரிஸை தலைமையிடமாகக் கொண்ட Association of Accidental Americans (AAA) என்ற இலாப நோக்கமற்ற அமைப்பு இந்த முடிவை வரவேற்றுள்ளது. இது தங்களது சட்டப்போராட்டம் மற்றும் பிரச்சாரத்தின் நேரடி பலன் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் நிறுவனர் மற்றும் தலைவர் Fabien Lehagre, "இந்த கட்டணக் குறைப்பு எங்களுக்கான முதல் முக்கிய வெற்றி" என்று சமூக வலைதளங்களில் வெளியிட்ட அறிக்கையில் கூறினார்.

அமெரிக்காவின் விதிமுறைகளின்படி, ஒருவர் எங்கு வசித்தாலும் அவர்களின் தேசியத்தை அடிப்படையாகக் கொண்டு வரி விதிக்கப்படுகிறது. இதனால் வெளிநாடுகளில் வாழும் அமெரிக்கர்கள் பல்வேறு வரி அறிக்கைகள் தாக்கல் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

மேலும் Foreign Account Tax Compliance Act (FATCA) போன்ற சட்டங்களின் கீழ், வெளிநாட்டு வங்கிகளில் உள்ள கணக்குகளின் விவரங்களையும் வருடாந்திர வரி அறிக்கைகளில் தெரிவிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. இந்த விதிமுறைகள் காரணமாக வெளிநாடுகளில் வாழும் அமெரிக்கர்களுக்கு வங்கி கணக்குகள் தொடங்குவதும் கடினமாகிறது என பல அமைப்புகள் குற்றம்சாட்டி வருகின்றன.

# தமிழகத்தின் அடுத்த டி.ஜி.பி யார்? மார்ச் 20-ல் இறுதி முடிவு!




சென்னை, மார்ச். 17–

தமிழக காவல்துறையின் புதிய தலைமை இயக்குநர் (DGP/HoPF) பதவிக்கு தகுதியான மூன்று அதிகாரிகள் கொண்ட பட்டியலை மத்திய பொதுப்பணியாளர் தேர்வாணையம் (UPSC) மார்ச் 20, 2026 அன்று இறுதி செய்ய உள்ளது. இதற்காக, மூன்று டிஜிபி அந்தஸ்துள்ள அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்து பரிந்துரைக்க, டெல்லியில் தேர்வுக் குழு கூட்டத்தை (Empanelment Committee Meeting) யு.பி.எஸ்.சி (UPSC) கூட்டியுள்ளது.

கடந்த பிப்ரவரி 12, 2026 அன்று, தமிழகத்தில் நிரந்தர டிஜிபி நியமனத்தை மூன்று வாரங்களுக்குள் முடிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த நியமனத்திற்காக தகுதியான அதிகாரிகளின் பட்டியலை யு.பி.எஸ்.சி (UPSC) –க்கு அனுப்ப மாநில அரசுக்கு ஒரு வாரம் அவகாசம் அளிக்கப்பட்டது. அந்த பட்டியலில் இருந்து 3 பேர் கொண்ட குழுவைத் தயார் செய்ய யு.பி.எஸ்.சி (UPSC) –க்கு இரண்டு வாரங்கள் வழங்கப்பட்டது. அவர்களுள் ஒருவரை மாநில அரசு உடனடியாகத் தலைவராக நியமிக்க வேண்டும்.

இந்த விவகாரத்தில், பிரகாஷ் சிங் வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய வழிகாட்டுதல்களைத் தமிழக அரசு மீறியதாக சென்னை கிஷோர் கே. சுவாமி தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தீர்த்து வைக்கும் போது நீதிமன்றம் இந்த உத்தரவுகளைப் பிறப்பித்தது. இதனிடையே, நீதிமன்ற உத்தரவின்படி, தமிழக அரசு பட்டியலை விரைவாக அனுப்பிய போதிலும், விடுபட்ட சில விவரங்களைக் கேட்டு யு.பி.எஸ்.சி (UPSC) கடிதம் எழுதியது.

குறிப்பாக, ஊதிய நிலை 16–ல் (Level–16) உள்ள டிஜிபிக்களின் முழுப் பட்டியலை மட்டுமே அனுப்ப வேண்டும் என்றும், நிலை 15–ல் உள்ளவர்களைச் சேர்க்க வேண்டாம் என்றும் யு.பி.எஸ்.சி (UPSC) கேட்டுக்கொண்டதாகக் காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. முன்னாள் டி.ஜி.பி சங்கர் ஜிவால் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, 1994–ஆம் ஆண்டு ஐபிஎஸ் பிரிவைச் சேர்ந்த ஜி. வெங்கட்ராமன் கடந்த செப்டம்பர் 2025 முதல் பொறுப்பு டிஜிபியாகப் பதவி வகித்து வருகிறார்.

அவரை விட சீனியர் அதிகாரிகளாக 5 பேர் உள்ளனர். டி.ஜி.பி பதவிக்கு குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் பணிக்காலம் இருக்க வேண்டும் என்ற விதியின்படி, ஒரு அதிகாரி தகுதி பெறாமல் போகலாம். இருப்பினும், பதவி காலியான தேதியில் (செப்டம்பர் 1, 2025) அவர் தகுதியுடன் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதே சமயம் இந்த விவகாரத்தில், ஊழல் புகார்களைச் சுட்டிக்காட்டி, ஒரு அதிகாரிக்கான 'நேர்மைச் சான்றிதழை' (Integrity Certificate) மாநில அரசு திரும்பப் பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

இதனிடையே புதிய டி.ஜி.பி தேர்வுக் குழு கூட்டத்தில் தமிழக அரசு சார்பில் தலைமைச் செயலாளர் மற்றும் உள்துறைச் செயலாளர் பங்கேற்பார்கள். மற்ற மூவர் யு.பி.எஸ்.சி தலைவர் (அல்லது அவரது பிரதிநிதி), மத்திய உள்துறைச் செயலாளர் மற்றும் மத்திய ஆயுதக் காவல் படைகளில் ஒன்றின் டி.ஜி.பி ஆகியோர் பங்கேற்பார்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது.

# பின்னலாடை உற்பத்திக்கான நூல் விலை கிலோவுக்கு ரூ.7 உயர்வு!



திருப்பூர், மார்ச். 17–

பின்னலாடை ஏற்றுமதி, உள்நாட்டு வர்த்தகம் மூலமாக ஆண்டுக்கு சுமார் ரூ.70 ஆயிரம் கோடிக்கு மேல் திருப்பூரில் வர்த்தகம் நடைபெற்று வருகிறது. பின்னலாடை உற்பத்தியின் மூலப் பொருளான நூலின் விலையை அடிப்படையாகக் கொண்டே ஆடைகளின் விலையும் நிர்ணயம் செய்யப்படுகிறது.

பின்னலாடை உற்பத்திக்கான நூல் விலை மாதம்தோறும் 1 மற்றும் 16–ம் தேதிகளில் நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன்படி, மார்ச் இரண்டாவது பகுதிக்கான நூல் விலையை நூற்பாலைகள் நேற்று வெளியிட்டன. இதில், பின்னலாடைகள் உற்பத்திக்கான அனைத்து வகையான நூல்களின் விலையும், கிலோவுக்கு ரூ.7 உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு பின்னலாடை உற்பத்தியாளர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இதுகுறித்து திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் கூறியதாவது: நூல் விலையானது பிப்ரவரி மாதம் கிலோவுக்கு ரூ.7 உயர்த்த நிலையில், தற்போது மேலும் ரூ.7 உயர்த்தப்பட்டுள்ளது.

# எரிபொருள் தட்டுப்பாடு எதிரொலி: 4 நாள் வேலை, 3 நாள் லீவ்; இலங்கை அதிரடி முடிவு!




ஸ்ரீலங்கா, மார்ச். 17–

எரிபொருள் இருப்பைப் பாதுகாப்பதற்கான அவசரகால நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, நாடு முழுவதும் உள்ள அரசு நிறுவனங்கள் நாளை (மார்ச் 18) முதல் வாரத்திற்கு 4 நாட்கள் மட்டுமே இயங்கும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி கூறுகையில், இந்த புதிய கால அட்டவணை பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கும் பொருந்தும் என்றும், இது காலவரையறை இன்றி நீடிக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்ற அவசரக் கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தனியார் துறையினரும் இதைப் பின்பற்றி இனிமேல் ஒவ்வொரு புதன்கிழமையையும் விடுமுறையாக அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார். பயணங்களைக் குறைக்கவும், நாட்டின் எரிபொருள் விநியோகத்தின் மீதான அழுத்தத்தைத் தளர்த்தவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்பு

## சென்னை தாம்பரத்திலுள்ள முன்னாள் ராணுவத்தினர் மருத்துவமனையில் (இசிஎச்எஸ்) காலியிடங்கள்!




சென்னை தாம்பரத்திலுள்ள முன்னாள் ராணுவத்தினர் மருத்துவமனையில் (இசிஎச்எஸ்) காலியாகவுள்ள பல்வேறு பணியிடங்களுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி: OIC Poly Clinic
காலியிடம்: 1
சம்பளம்: மாதம் ரூ.95,000
தகுதி : ஏதாவதொரு பாடப்பிரிவில் இளநிலை பட்டம் பெற்றிருப்பதுடன் 5 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

பணி: Medical SPI
காலியிடம்: 1
சம்பளம்: மாதம் ரூ.1,30,000
தகுதி: மருத்துவத் துறையில் எம்.டி, எம்.எஸ் பெற்றிருப்பதுடன் 3 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

பணி: Medical Officer
காலியிடம்: 1
Advertise with us
சம்பளம்: மாதம் ரூ.95,000
தகுதி: மருத்துவத் துறையில் எம்பிபிஎஸ் தேர்ச்சியுடன் 3 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

பணி: Lab Tech.
காலியிடம்: 1
சம்பளம்: மாதம் ரூ.36,500
தகுதி: எம்எல்டி பிரிவில் இளநிலை பட்டம் பெற்றிருப்பதுடன் 3 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண் டும்.

பணி: Pharmacist
காலியிடம் : 1
சம்பளம்: மாதம் ரூ.36,500
தகுதி: பார்மஸி பிரிவில் பட்டம் பெற்றிருப்பதுடன் பார்மஸி கவுன்சிலில் பதிவு செய்திருக்க வேண்டும். மேலும் 3 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

பணி: Nursing As–sistant
காலியிடம்: 1
சம்பளம்: மாதம் ரூ.36,500
தகுதி: செவிலியர் பிரிவில் டிப்ளமோ தேர்ச்சியுடன் 5 ஆண்டுகள்பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

பணி: Dental Hy–gienist
காலியிடம் : 1
சம்பவம்: மாதம் ரூ.36,500
தகுதி: பல் சுகாதார பிரிவில் டிப்ளமோ தேர்ச்சியுடன் 5 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

பணி: பெண் உதவியாளர்
காலியிடம் : 1
சம்பளம்: மாதம் ரூ. 21,800
தகுதி : எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். மேலும் 5 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

பணி: Safaiwala
காலியிடம்: 1
சம்பளம்: மாதம் ரூ. 21,800
தகுதி: எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். மேலும் 5 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

தேர்வு செய்யப்படும் முறை: நேர்முகத் தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள்: 24.3.2026

நேர்முகத் தேர்விற்கு வரும்போது தேவையான அனைத்துச் சான்றிதழ்களின் அசல், நகல்கள் மற்றும், சமீபத்தில் எடுக்கப்பட்ட இரண்டு பாஸ்போர்ட் அளவு கலர் புகைப்படம் கொண்டு வர வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: www.echs.gov.in இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பப்படிவத்தை பதிவிறக்கம் செய்து, அதைப் பூர்த்தி செய்து, அதனுடன் தேவையான அனைத்துச் சான்றிதழ்களின் நகல்களையும் சுய சான்றொப்பம் செய்து OIC, Stn HQ (ECHS Cell),Tambaram என்ற அஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர கடைசி நாள்: 16.3.2026

விண்ணப்பிப்போரின் கூடுதல் விபரங்களுக்கு இங்கே கிளிக் செய்து தெரிந்துகொள்ளவும்.



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், 2026 சட்டமன்ற பொது தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு அனைத்து அரசியல் கட்சிகள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உடனான ஆலோசனை கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலரான மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜித்சிங் தலைமையில் நடைபெற்றது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881





# தமிழகம் முழுவதும் என்.டி.ஏ. கூட்டணி ஆர்ப்பாட்டம்!

சென்னை, மார்ச். 17–

சட்டம் ஒழுங்கு, பெண்கள் பாதுகாப்பை வலியுறுத்தி, தமிழகம் முழுவதும் தேஜ கூட்டணிக் கட்சிகள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழகத்தில் பாலியல் வன்கொடுமையை கண்டித்து இன்று தமிழகத்தில் பல்வேறு இடங்களில் தேஜ கூட்டணி தலைவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சென்னையில் நடந்த போராட்டத்தில் அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ், கடலூரில் பாமக தலைவர் அன்புமணி, தஞ்சாவூரில் அமமுக பொதுச்செயலாளர் தினகரன், ஈரோட்டில் தமாகா தலைவர் ஜிகே வாசன் பங்கேற்றனர்.

தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் சார்பில் மதுரை மாவட்டம் பழங்காநத்தம் பகுதியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் அதிமுக முன்னாள் அமைச்சர்கள் பங்கேற்றனர். சென்னை எம்ஜிஆர் நகரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற இபிஎஸ் பேசியதாவது: தமிழகத்தில் உளவுத்துறை செயலிழந்துவிட்டது. போதைப்பொருள் புழக்கம் அதிகரித்தது. பள்ளி, கல்லூரிகள் அருகே நடைபெறும் கஞ்சா விற்பனையால் மாணவர்கள் சீரழிகின்றனர். இவ்வாறு இபிஎஸ் பேசினார்.

# த.வெ.க. தனித்து போட்டி- பெரம்பூரில் களம் இறங்குகிறார் விஜய்!

சென்னை, மார்ச். 17–



சென்னை பட்டினப்பாக்கத்தில் நடைபெற்ற தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் கூட்டத்தில் பேசிய விஜய், சட்டசபை தேர்தலில் நாம் தனித்தே போட்டியிடப் போகிறோம். தொகுதிகளுக்கு சென்று களப்பணியா ற்றுங்கள். வேட்பாளர் பட்டியல் விரைவில் அறிவிக்க ப்படும். தமிழகம் முழுவதும் நானும் சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறேன். தேர்தலில் கண்டிப்பாக வெற்றி பெறுவோம். நம்பிக்கையோடு இருங்கள் என்று கூறியுள்ளார்.

இதனால் தமிழக வெற்றிக்கழகம் தனித்தே போட்டியிடுவதாக கூறப்படுவதால் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் சென்னையில் களம் இறங்கி உள்ளனர். ஆகையால் பனையூரில் உள்ள தலைமை அலுவலகம் பரபரப்பாக காணப்படுகிறது.

த.வெ.க. தனித்தே போட்டியிடுவதால் பெரம்பூர் தொகுதியில் விஜய், வில்லிவாக்கத்தில் ஆதவ் அர்ஜுனா, தி.நகர் தொகுதியில் புஸ்சி ஆனந்த் போட்டியிடுவார்கள் என்றும் ஏனைய தொகுதிகளில் கட்சியின் மாவட்ட செயலாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும் என கூறப்படுகிறது.

மொத்தத்தில் நடைபெற உள்ள தமிழக சட்டசபை தேர்தலில் 4 முனைப்போட்டி என்பது உறுதியாகியுள்ளதால் இனி தேர்தல் தொடர்பாக நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வுகளுமே புதுமை யாகவே இருக்கும். தேர்தல் முடிவுகளிலும் 50 ஆண்டுகாலம் ஆண்ட கட்சிகள் மற்றும் புதுவரவான கட்சிக்கும் இடையேயான வெற்றி, தோல்வி என்பது குறைந்த வாக்கு வித்தியாசத்திலேயே இருக்கும் என்பதால் இத்தேர்தல் மறக்க முடியா தவையாக அமையும் என்பது மறுப்பதற்கில்லை.

விஜய் சொல்வது போல் 1967, 1977 பிறகு 2026 தேர்தல் வரலாற்றை படைக்குமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்...

# இனி நேரில் வர வேண்டாம்.! ஆன்லைனிலேயே ஈசியா வேட்புமனு தாக்கல் செய்ய சூப்பர் சான்ஸ்!

புதுடெல்லி, மார்ச். 17–




நாடே எதிர்பார்த்து காத்திருந்த 5 மாநில தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் கேரளா, புதுச்சேரி, அஸ்ஸாம் மாநிலங்களில் வேட்புமனு தாக்கல் தொடங்கியுள்ளது. தமிழகம் மற்றும் மேற்கு வங்கத்தில் இந்த மாதம் இறுதியில் வேட்புமனு தாக்கல் தொடங்கவுள்ளது.

**வேட்பு மனு தாக்கல்– தயாராகும் வேட்பாளர்கள்**

அதிலும் ஏப்ரல் 6ஆம் தேதி வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாளாகும். அதில் 3 நாட்கள் விடுமுறை நாட்களாக வருவதால் வெறும் 5 நாட்களுக்குள் வேட்புமனுவை தாக்கல் செய்ய வேண்டிய நிலை அரசியல் கட்சிகளுக்கு உருவாகியுள்ளது. எனவே வேட்பு மனு செய்யும் அலுவலகத்தில் வேட்பாளர்களின் கூட்டம் அலைமோதும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிலும் வேட்புமனு தாக்கல் செய்யும் போது 4பேர் மட்டுமே உடன் வர வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளது. இந்த நிலையில், வேட்பாளர்கள் ஆன்லைன் மூலம் வேட்புமனுவை தாக்கல் செய்ய வாய்ப்பானது உருவாக்கப்பட்டுள்ளது.

**ஆன்லைனில் வேட்புமனு தாக்கல்**

அந்த வகையில், தமிழக சட்டமன்றத் தேர்தலில் வேட்பாளர்கள் சுவிதா (Su–vidha) செயலி மூலம் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும் வசதி தேர்தல் ஆணையத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையத்தால் உருவாக்கப்பட்டுள்ள சுவிதா (Suvidha) ஆப் மூலம் தேர்தல் தொடர்பாக பல்வேறு விவரங்களை தெரிந்து கொள்ளவும், வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் பிரச்சாரம் செய்ய அனுமதி வாங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில், இந்த ஆப்பில் புதிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டு 'சுவிதா 2.0' (Suvidha 2.0) அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் வேட்பாளர்கள் மொபைலிலேயே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும், பிரச்சாரத்திற்கு அனுமதிச் சீட்டுகளைப் பெறவும் வழிவகுக்கிறது.

**'சுவிதா 2.0'– வேட்புமனு தாக்கல்**

ஏற்கனவே ஆன்லைனில் வேட்புமனுதாக்கல் செய்யும் வசதி ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள நிலையில், வேட்பாளர்கள் பெரிய அளவில் ஆர்வம் காட்டாத நிலை தான் நீடித்து வந்தது. இதற்கு முக்கிய காரணமாக வேட்புமனு தாக்கல் செய்யும் வசதி கடினமாக இருந்ததாக கூறப்படுகிறது. தற்போது ஆன்லைனில் வேட்புமனு தாக்கல் செய்யும் வசதியானது எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் வேட்பாளர்கள் 'சுவிதா 2.0' (Suvidha 2.0) ஆப்பில் வேட்பாளர்கள் தங்கள் மொபைல் எண் மூலம் பதிவு செய்த பிறகு தங்களது வாக்காளர் அடையாள அட்டை எண்ணை பதிவு செய்தால் போதும். அடுத்தாக வேட்பாளர்கள் தொடர்பாக அனைத்து தகவலும் அந்த ஆப்பில் காட்டும். அடுத்தாக வேட்பாளர்கள் தங்களது சொத்து விவரம், வழக்கு விவரங்கள் மற்றும் பிரமாணப் பத்திரங்களோடு உரிய ஆவணங்களையும் பதிவேற்றம் செய்து தங்களது வேட்புமனு சமர்பிக்கலாம்.

**ஆன்லைனில் வேட்புமனு தாக்கல் செய்வார்களா.?**

எனவே நவீன காலத்திற்கு ஏற்ப மக்கள் மாறி வரும் நிலையில், தேர்தல் ஆணையமும் ஆனிலைனிலேயே வேட்புமனு தாக்கல் செய்யும் வசதியை அறிமுகம் செய்துள்ளது. எனவே தேர்தல் ஆணையம் அறிமுகம் செய்துள்ள இந்த புதிய நடைமுறையை வேட்பாளர்கள் பயன்படுத்திக்கொள்வார்களா.? அல்லது எப்போதும் போல் விளம்பரத்திற்காக நூற்றுக்கணக்கான கார்கள் அணிவகுக்க வேட்புமனு தாக்கல் செய்வார்களா.? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# ஈரான் டிரோன் தாக்குதல்: தீப்பிடித்து எரியும் மிகப்பெரிய எண்ணெய் நிலையம்!

ஈரான், மார்ச். 17–



ஈரான் மீது அமெரிக்கா–இஸ்ரேல் இணைந்து தொடுத்துள்ள போர் இன்று 18–வது நாளாக நீடித்து கொண்டிருக்கிறது. இதில் ஈரான் மீது தாக்குதல் தொடர்ந்து வருகிறது. இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள், எண்ணெய் உள்கட்டமைப்புகளை ஈரான் தாக்கி வருகிறது.

இந்த நிலையில் ஐக்கிய அரபு எமிரேட்சின் மிகப்பெரிய எண்ணெய் நிலையம் மீது ஈரான் தாக்குதல் நடத்தி உள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்சின் புஜைரா எண்ணெய் தொழில் மண்டலத்தில் டிரோன் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அங்குள்ள எண்ணெய் உள்கட்டமைப்புகள் தீப்பிடித்து எரிகிறது.

தீயை கட்டுக்குள் கொண்டு வர தீயணைப்பு படையினர் போராடி வருகிறார்கள். சில நாட்களுக்கு முன்பு புஜைரா எண்ணெய் நிலையம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதையடுத்து அங்கு எண்ணை உற்பத்தி பணி பாதிக்கப்பட்டு பின்னர் சீரானது.

இந்த நிலையில்தான் அந்த எண்ணெய் நிலையம் மீது ஈரான் மீண்டும் தாக்குதல் நடத்தி உள்ளது. அதே போல் துபாயிலும் இன்று மீண்டும் தாக்குதல் நடத்தப் பட்டது.

அங்கு அதிகாலையில் பயங்கர குண்டுவெடிப்பு சத்தங்கள் கேட்டன. ஈரானின் தாக்குதலை தொடர்ந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தனது வான்வெளியை மூடுவதாக தெரிவித்தது. சில மணி நேரத்துக்கு பிறகு வான்வெளியை திறப்பதாக அறிவிக்கப்பட்டது.

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள அமெரிக்க தூதரகம் மீது இன்று மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டது. டிரோன்–ஏவுகணை தாக்குதலில் தூதரக வளாகம் தீப்பிடித்து எரிந்தது. இதற்கிடையே பாக்தாத்தின் ஜாதிரியா மாவட்டத்தில், ஈரானின் ஆதரவு பெற்ற குழுவின் தலைமையகம் வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டது. இதில் 2 பேர் பலியானார்கள்.

ஈரான் மீது இஸ்ரேல் தனது வான்வழித் தாக்குதலை தீவிரப்படுத்தியது. தலைநகர் தெக்ரான் உள்ளிட்ட பல நகரங்கள் மீது குண்டுவீசப்பட்டன. அதேநேரத்தில் லெபனானில் உள்ள ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா இயக்கத்தினர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டன. இதற்கிடையே இஸ்ரேல் நகரங்களை குறிவைத்து ஈரான் ஏவுகணைகளை வீசியது.

# காருக்குள் கருகிய நிலையில் 4 உடல்கள் மீட்பு - சம்பவ இடத்தில் தடயவியல் துறை ஆய்வு!

திசையன்விளை, மார்ச். 17–



நெல்லை மாவட்டம் திசையன்விளை அருகே உள்ள பெட்டைகுளத்தில் இருந்து கல்லுவிளை செல்லும் சாலையில் பனங்காடு பகுதி இருக்கிறது. இந்த பகுதியில் ஒரு பனைமரத்துக்கு கீழ் இன்று காலை கார் ஒன்று எரிந்து எலும்புக்கூடாக காட்சியளித்த நிலையில் நின்று கொண்டிருந்தது.

இதனை அந்த வழியாக வயக்காட்டுக்கு சென்றவர்கள் பார்த்து திசையன்விளை போலீஸ் நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர். உடனடியாக இன்ஸ்பெக்டர் எழில் சுரேஷ் தலைமையிலான போலீசார் அங்கு விரைந்து சென்று பார்வையிட்டனர்.

அப்போது அந்த காரில் உள்பகுதி இருக்கைகளில் உடல்கள் எரிந்த நிலையில் இருந்தது. தகவல் அறிந்து வள்ளியூர் டி.எஸ்.பி. வெங்கடேசன் விரைந்து சென்று ஆய்வு செய்தார். அப்போது காரின் டிரைவர் இருக்கையில் ஒரு உடலும், பின் இருக்கைகளில் 3 உடல்களும் முற்றிலும் தீயில் எரிந்த நிலையில் இருந்தது.

மேலும் அவர்கள் வந்த காரும் முற்றிலும் அடையாளம் தெரியாத அளவுக்கு எரிந்து கரிக்கட்டையாகி இருந்தது. இதையடுத்து தடயவியல் நிபுணர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்கள் அங்கு சென்று தடயங்களை சேகரித்து வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக திசையன்விளை போலீசார் வழக்குப்பதிவு செய்து காரில் வந்தவர்கள் யார்? இச்சம்பவம் கொலையா? தற்கொலையா? அல்லது காரில் வந்தவர்கள் இரவில் தூங்கியபோது கார் திடீரென தீப்பிடித்து எரிந்து 4 பேரும் இறந்திருக்கலாமா? என்ற கோணத்தில் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவ இடத்திற்கு போலீஸ் சூப்பிரண்டு பிரசன்னகுமார் சென்று விசாரணை நடத்தி வருகிறார். காரின் அருகே பொதுமக்கள் யாரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. சம்பவம் நடந்த இடமானது சாலையில் இருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் உள்ள பனங்காட்டு பகுதியில் உள்ளது. காரில் டிரைவர் இருக்கையில் ஆண் ஒருவரும், பின் இருக்கைகளில் ஒரு பெண் நடுவிலும், 2 குழந்தைகள் அந்த பெண்ணின் இடது மற்றும் வலது புறத்திலும் இருப்பது போன்று தடயங்கள் சிக்கி உள்ளது. இதனால் இறந்தவர்கள் ஒரே குடும்பத்தினராக இருக்கலாம். அதாவது கணவன், மனைவி மற்றும் 2 குழந்தைகள் என இருக்கலாம் என்று போலீசார் சந்தேகிக்கின்றனர்.

அதே நேரத்தில் காரின் சாவி ஆன் செய்த நிலையில் இருக்கிறது. மேலும் காரின் டிரைவர் இருக்கையானது சாய்ந்த நிலையில், அதாவது ஓய்வெடுக்கும்போது இருக்கையை சாய்த்து விட்டு டிரைவர் தூங்குவது போல் இருக்கிறது.

இதனால் நெடுந்தூர பயணமாக காரில் வந்தவர்கள் தூக்க கலக்கத்தினால் ஓரமாக காரை நிறுத்திவிட்டு தூங்கி கொண்டிருந்தபோது ஏ.சி. கசிவால் தீப்பற்றி எரிந்து இறந்திருக்கலாமா என்று போலீசார் சந்தேகம் அடைந்துள்ளனர். இவ்வாறாக பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி இறந்தவர்கள் குறித்து விசாரித்து வருகின்றனர்.

அதிகாலையில் எரிந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்ட காரில் 4 உடல்கள் கரிக்கட்டையாக கிடக்கும் சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஆதவ் அர்ஜுனா பேச்சு உண்மைக்கு மாறானது; ரஜினி கண்டனம்!

சென்னை, மார்ச். 17–



என்னைப்பற்றி தவெக கட்சியில் பொறுப்பில் இருக்கும் ஆதவ் அர்ஜுனா கூறியிருப்பதாவது உண்மைக்கு மாறான கருத்து என்று நடிகர் ரஜினி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

சென்னையில் நடந்த த.வெ.க., ஆர்ப்பாட்டத்தில் பேசிய ஆதவ் அர்ஜுனா, 'திமுக மிரட்டியதால் தான் அரசியலுக்கு வரும் முடிவை ரஜினி கை விட்டார்'' என கூறியிருந்தார். இதற்கு அரசியல் கட்சி தலைவர்கள், சினிமா துறையினர், ரஜினி ரசிகர்கள் உட்பட பல்வேறு தரப்பினர் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

திருமாவளவன், எஸ்.பி.வேலுமணி, அண்ணாமலை, அர்ஜுனமூர்த்தி, அன்புமணி ராமதாஸ், ஜி.கே. வாசன், ஜான் பாண்டியன், புகழேந்தி மற்றும் பல கட்சி அரசியல் தலைவர்கள், அமீர், ஜி.தனஞ்சயன் மற்றும் திரையுலக நண்பர்கள், மற்றும் நக்கீரன் கோபால், சாணக்கியா ரங்கராஜ் பாண்டே மற்றும் ஊடகத்துறையினர், என்னை வாழவைக்கும் தெய்வங்களான ரசிகப் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காலம் பேசாது ஆனால் காத்திருந்து பதில் சொல்லும்.

# மகத்தான தோற்றம் - சுயராஜ்யத்தின் விதை (சத்ரபதி சிவாஜி வரலாறு) நூல் வெளியீட்டு விழா!



மதுரை, மார்ச். 17–

நேற்று மாலை மதுரை டி பி. ரோடு, வெஸ்டர்ன் பார்க் ஹோட்டல் மாநாட்டு அரங்கத்தில் நடைபெற்றது. தொகுப்பாசிரியர் பொறியாளர், வேல்யூவர் எல். பாலாஜி வரவேற்புரை மற்றும் அறிமுக உரை ஆற்றினார். மற்றொரு தொகுப்பாசிரியர், தமிழ் ஜனம் டி வி இயக்குநர், வழக்கறிஞர் என். சீனிவாசன் முன்னிலை வகித்துப் பேசுகையில் சத்ரபதி சிவாஜி வாழ்க்கை சுயம்பு போல, வரலாறு அனைவருக்கும் தெரிய வேண்டும் என்றார். சதி அன்றைய காலகட்டத்தில் ஏன் நிகழ்ந்தது என்பதையும், பழிவாங்கும் எண்ணமே இந்துக்களிடம் இல்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார். தனது 16 ஆவது வயதில் பொறுப்பேற்று 88 கோவில் நிர்வாக அறங்காவலர் பணியாற்றி வரும் தஞ்சாவூர் அரச குடும்பத்தின் தலைவர் ஸ்ரீ மந்த் பாபாஜி ராஜா போன்ஸ்லே சத்ரபதி அவர்கள் நூலினை வெளியிட்டுப் பேசுகையில் சத்ரபதி சிவாஜி ஆட்சி ஜனநாதன் ஆட்சியாக மக்கள் ஆட்சியாக இருந்தது, வரலாற்றை மறைக்காமல் எளிய தமிழ் நடையில் இந்நூல் வந்துள்ளது. நம் அடையாளமே அனைவரையும் சுயமரியாதையுடன் உயர்ந்த நிலையில் கொண்டு வருவது தான் என்றார். இந்த நூல் இளைய தலைமுறையினர் மற்றும் தேசப் பற்றாளர்களுக்கு பயன் பல தரும் என்றார்.


நூலின் முதல் பெற்று சிறப்புரை ஆற்றிய கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத் தலைவர் மனிதத்தேனீ ரா. சொக்கலிங்கம் தனது 50 நிமிட உரையில் அரை நூற்றாண்டு காலம் வாழ்ந்த சத்ரபதி சிவாஜி மராட்டிய மாநிலம் தாண்டி சர்வதேச அரசியல் கவனத்தைக் கவர்ந்த தலைவராக இருந்தவர். அவர் ஆட்சியில் திறமை மற்றும் நேர்மைக்கு முன்னுரிமை, பழங்கால இந்து அரசியல் மரபுகளுக்கு புத்துயிர் அளித்தார். ஆண்டுதோறும் சிவ ஜெயந்தியை தன்னாட்சி உணர்வு, சுயமரியாதையை நினைவூட்டும் நாளாக நடத்துகின்றனர். அவர் மறைந்து 346 ஆண்டுகள் ஆகியும் மக்கள் மனதில் தலைவராக வாழ்கிறார்.

ஆரம்ப காலத்தில் அவரைப் பாதுகாத்திட பலர் உயிர் துறந்துள்ளனர். சத்ரபதி சிவாஜி பட்டாபிஷேக நாளில் வெள்ளைப் புகையும் பீரங்கி முழக்கமும் இணைந்து பயன்படுத்தப்பட்டது. அன்றைய கால கட்டத்தில் தகவல் தொடர்பு நுண்ணறிவு உள்ள மன்னராக இருந்துள்ளார். ஒலியை தகவல் தொடர்பு கருவியாகப் பயன்படுத்தியது சத்ரபதி சிவாஜியின் தனித்துவம். அவர் வெல்ல முடியாத போரைத் தொடங்க மாட்டார் என முகலாயத் தளபதி கூறியுள்ளார். மக்கள் தங்கள் நாட்டை தாங்களே ஆள வேண்டும் என்ற சுயாட்சி கனவு நனவாக உழைத்தவர் என்றார். வெற்றித் தமிழர் பேரவை பொறியாளர் ஜெ. சுரேஷ் கருத்துரை ஆற்றினார். கோ கிளப் பவுண்டேஷன் விஜயலெட்சுமி நிகழ்வைத் தொகுத்து வழங்கினார். நூலை சிறப்பாக வடிவமைத்து அச்சிட்ட சான்லாக்ஸ் லெட்சுமணன், கார்த்திகேயன் கௌரவிக்கப்பட்டனர்.

குருதிக் கொடையாளர் இல.அமுதன், ரோட்டரி மேனாள் ஆளுநர் ஆர்.ராஜா கோவிந்தசாமி, ஆர் எஸ் எஸ். மகா நகர் தலைவர் மங்கள முருகன், விவேகானந்தா கேந்திரா ராமகிருஷ்ணன், மதுரை மராத்தா சங்கத்தினர், இந்து ஆலயப் பாதுகாப்புக் குழு வழக்கறிஞர் சுந்தரவடிவேல், சான்லாக் மெஷின்ஸ் சங்கரநாராயணன், மிலன் லால்ஜி வோரா, பொறியாளர் கண்ணன், தமிழறிஞர் ராஜேந்திரன், வி எச் பி ஆதிசேஷன், மேனாள் டிவிஎஸ் வெங்கடேஷ் ஜிம் சுப்பிரமணியன், மற்றும் கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்ற முன்னோடிகள் தியாக தீபம் அ.பாலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, பேராசிரியர் மு. முருகேசன், குடந்தை ரகுநாதன், மீ.ராமசுப்பிரமணியன், சு. பாலகிருஷ்ணன், பி.பன்னீர்செல்வம் மற்றும் சுதேசி இயக்க ராஜாஜி உள்ளிட்ட ஏராளமான பெருமக்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர். அரங்கம் நிறைந்து நடைபெற்றது. பாலாஜி அசோசியேட்ஸ் அலுவலகப் பணியாளர்கள் சிறப்பான ஏற்பாடுகளை மிக நேர்த்தியாகச் செய்திருந்தனர். மகத்தான தலைவருக்கு தமிழின் தலைநகர் மதுரையில் நடந்த இந்த விழா மணிமகுடமாக அமைந்தது.

## சினிமா துளிகள்..!

# பெண்களிடம் உஷாராக இருங்கள்... ஆண்களை எச்சரிக்கும் பிரபல நடிகை!



உங்களுடன் தோழியாக, காதலியாக, மனைவியாக பயணிக்கும் பெண்கள் எந்த ஒரு தேசத்துக்கும் மகாராணியாக இல்லாமல் இருக்கலாம்.

'தெனாவட்டு', 'கச்சேரி ஆரம்பம்', 'சேவல்', 'தம்பிக்கோட்டை' போன்ற படங்களில் நடித்தவர் பூனம் பாஜ்வா. ஒரு கட்டத்தில் பட வாய்ப்புகள் குறைய தொடங்க சிறிய கதாபாத்திரங்களில் நடித்தார். தற்போது சினிமாவில் இருந்து ஒதுங்கி இருக்கும் பூனம் பாஜ்வா, சமூக வலைதளங்களில் தனது கவர்ச்சி படங்களை வெளியிட்டு கவனம் ஈர்த்து வருகிறார். அமுல்பேபி போல இருக்கும் அவரை இன்ஸ்டாகிராமில் கிட்டத்தட்ட 40 லட்சம் பேர் பின் தொடருகிறார்கள்.

இதற்கிடையில் ரசிகர்களிடையேயான ஒரு கலந்துரையாடலில் பூனம் பாஜ்வா பேசும்போது, "உங்களுடன் தோழியாக, காதலியாக, மனைவியாக பயணிக்கும் பெண்கள் எந்த ஒரு தேசத்துக்கும் மகாராணியாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர்களை ராணிகளாக போற்றி கொண்டாடுங்கள். அவர்களின் அழகையும். அன்பையும், ஆளுமையையும் பாராட்டுங்கள். ஓ.கே. எல்லாத்தையும் மறந்துடலாம் என்று சொல்லும் பெண்களிடம் உஷாராக இருங்கள்.

ஏனெனில் பெண்கள் எதையும் மறப்பதில்லை. குறிப்பாக உங்கள் வாழ்க்கையில் வரும் மற்ற பெண்கள் சார்ந்த விஷயங்களை மறக்கவே மாட்டார்கள். எனவே பெண்களிடம் உஷாராக இருங்கள், ஜாக்கிரதை'' என்று குறிப்பிட்டார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020